சென்று பார்த்திருக்கிறோம். பல இடங்களில் போர் செய்யப்பட்டு, ஹாண்ட் பம்புகள் போடப்படாமல் அதனால் தண்ணீர் இல்லாமல், மக்கள் மிகவும் அவதியுறுகிறார்கள், கால்நடைகள் சில இறந்திருக்கின்றன, சில கால்நடைகள் வெளியே சென்றிருக்கின்றன. இந்த நிலைமைகள் எல்லாம் அமைச்சர் அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் தன்னைத்தானே பாராட்டிக் கொள்ளுகின்ற அளவிற்கு நிலைமைகள் அங்கே இருப்பதாகச் சொல்லுகிறார். இது மிகவும் அவசரமான பிரச்சினை, குடிதண்ணீர்ப் பிரச்னை தொகுதியிலே நிலைமையை அறிய அமைச்சர் அவர்கள் வந்தால், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். ஹாண்ட் பம்புகள் சரிவர வேலை செய்யவில்லை. அவைகளை சரிசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரண வேலைத் திட்டத்தின்கீழ் குடிநீர் வடிகால் வாரியம்—இன்னும் சொல்லிக் கொள்வேன்—மிகத்திறமையாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் இப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். பொதுவாகச் சொல்லக்கூடாது. கேள்வி நேரம் முடிந்து $10\frac{1}{2}$ மணிக்குப் பிறகு நாம் 'ப்ரீ'யாக இருப்போம். (குறுக்கீடு) நான் நின்று கொண்டிருக்கிறேன். இப்படி ஒருவருக்கொருவர் குற்றச் சாட்டுச் சொல்வது சரியல்ல. மக்களுக்கு தண்ணீர் பிரச்னையிலே பரிகாரம் தேடுவதற்காக வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில் அதன் பெயரைச் சொல்லி, இப்படி இருக்கிறது என்று $10\frac{1}{2}$ மணிக்குச் சொன்னால், நான் உடனடியாக எஸ்.ஈ.ஐக் கூப்பிட்டு, 12 மணிக்குள் அதைப்பற்றி கவனிக்க முடியுமா? அதைச் செய்ய முடியுமா, என்பது பற்றி பரிசீலனை செய்யச் சொல்கிறேன். இந்தப் பிரச்னையில் நாம் 'ப்ரேக்னெக்ஸ்பீடில்' போய்க் கொண்டிருக்கிறோம் என்று மீண்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தர்மபுரி மாவட்டம் வெள்ளோளைப் பகுதியில்
பாசனத்திற்கு வாய்க்கால் வெட்டும் பணி.

*வினா எண் 865—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளோளை என்ற இடத்தில் ஏரி கட்டப்

பட்டும் பாசனத்திற்காக வாய்க்கால் வெட்டும் பணி இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) எப்போது வெட்ட ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) மேற்படி ஏரியும், வாய்க்கால் 50 ஏக்கர் நிலம் பாசனம் வரை வெட்டப்படும் பணியும் வறட்சி மீட்புப் பணித் திட்டத்தின் கீழ் வெட்டப்பட்டுள்ளது. தற்பொழுது பாசன நிலம் 25 ஏக்கர் வரை வாய்க்கால் வெட்டலாம் என்ற அரசு ஆணைப்படி, மேற்படி கால்வாய் மேலும் 25 ஏக்கர் பாசனம் வரை வெட்டப்படும் என்றும் அதற்கான ஆரம்ப ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன என்றும் சிறு பாசன தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

தம்பிக்கோட்டையில் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம்.

*வினா எண் 866—திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டையில் பர்மா தமிழர்களுக்கும் ஏழை மக்களுக்கும் பட்டா கொடுக்கப் பட்ட நிலங்களுக்கு பாசன வசதி கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) : இதுபற்றிய கோரிக்கையின் அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு புனரமைப்பு இயக்குநரின் ஒப்புதலைப் பெறுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஒப்புதல் கிடைத்தவுடன் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.